**தேதி :** 05.02.2026 **SC.No. :** 31/2014 PW :9 Dr.சண்முகையா

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என்னுடைய மருத்துவமனைக்கு 3 காயம்பட்ட நபர்களும் 11.10 மணிக்கு வந்துள்ளார்கள். அவர்கள் 3 பேருக்கும் அன்று இரவு 09.00 மணியளவில் காயம் ஏற்பட்டதாக என்னிடம் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் 3 பேரும் நேரடியாக அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். மருத்துவ நமூனாவுடன் காயம்பட்டவர்கள் வரவில்லை என்றால் சரிதான். நான் மேற்குறிப்பிட்ட நபர்கள் சிகிச்சைக்கு வந்த விபரம் குறித்து காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளேன். நான் 3 நபர்களுக்கும் பார்த்த காயங்கள் கூர்மையான தகரம் போலுள்ள பொருட்களின் மீது விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

இதே நாள் மருதையா மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் என்னிடம் சிகிச்சைக்கு இரவு 10.15 மணிக்கு வந்தார்கள். அவர்கள் 2 பேரும் தங்களை 15.02.2013 அன்று இரவு 09.00 மணியளவில் சுந்தரேசபுரத்திலுள்ள அவர்களுடைய வீட்டில் அடையாளம் தெரிந்த 6 நபர்கள் சுந்தரேசபுரத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து இரும்பு கம்பி மற்றும் கம்பு வைத்து தாக்கியதாக கூறினார் என்றால் சரிதான்.

(1). மருதையா பாண்டியனுக்கு தலையின் பின்புறம் 3 x 3 cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது.

(2). முன்தலையில் V வடிவில் 3 x 2 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(3). நேர்கோடான ஒரு காயம் இடது கண்புருவத்தில் ஒரு இஞ்ச் நீளத்தில் இருந்தது.

(சாட்சி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபத்து பதிவேடு தெளிவாக இல்லாததினால் அவரால் அதனை படித்து பார்த்து காயத்தின் தன்மையை குறித்து சாட்சியம் அளிக்க இயலவில்லை என்று கூறினார். மேலும், எதிரி தரப்பு வழக்கறிஞர் தெளிவான விபத்து பதிவேட்டின் நகலை பெற்று தாக்கல் செய்ய கால அவகாசம் கோரினார். எனவே, இந்த வழக்கின் குறுக்கு விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:43:57 +0530